செ.வெ.எண்: 40/அக்டோபர் நாள் : 18.10.2019

# இராமநாதபுரம் மாவட்டம்

## மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் டெங்கு உள்ளிட்ட வைரஸ் காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கைகள்

## மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு அரசு முதன்மை செயலர் போக்குவரத்து துறை டாக்டர் பி.சந்திரமோகன்,இ.ஆ.ப., அவர்கள்

## மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்திற்கு இன்று (18.10.2019) வருகை தந்துள்ள மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு அரசு முதன்மை செயலர் போக்குவரத்து துறை டாக்டர் பி.சந்திரமோகன்,இ.ஆ.ப., அவர்கள், பரமக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், அனைத்துத் துறை அலுவலர்களுடன் நடைபெற்ற கூட்டத்தில், மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் டெங்கு உள்ளிட்ட வைரஸ் காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் தொடர்ந்து மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர் போக்குவரத்துத்துறை டாக்டர் பி.சந்திரமோகன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

வடகிழக்கு பருவமழை காலத்தை முன்னிட்டு புயல், வெள்ளம் போன்ற அவசர கால சூழ்நிலையை எதிர்கொள்ள ஏதுவாக, மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாவட்டத்தில் எளிதில் தண்ணீர் தேங்கக்கூடிய பகுதிகளாக 39 பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. இப்பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக துணை ஆட்சியர் நிலை அலுவலர்கள் தலைமையில் 15 மண்டல குழுக்கள் அமைக்கப்பட்டு கள ஆய்வுகள் மூலம் அந்தந்த பகுதிகளில் முந்தைய காலங்களில் ஏற்பட்ட தண்ணீர் தேங்கிய/வெள்ள பாதிப்பு போன்ற நிகழ்வுகளை பகுப்பாய்வு செய்தும், தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டும் மழை, வெள்ளம் போன்ற பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் தண்ணீர் தேங்காமல் விரைவாக வடிந்து ஓடும் வகையில் நீர் வடிகால்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோல அவசர கால சூழ்நிலையில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக 5000-க்கும் மேற்பட்ட முதல்நிலை மீட்புப் பணியாளர்கள் (First Responders), 132 கால்நடை மீட்பாளர்கள், 199 மரம் வெட்டும் நபர்கள், 21 பாம்பு பிடிக்கும் நபர்கள் கண்டறியப்பட்டு உரிய பயிற்சி வழங்கப்பட்டு தயார் நிலையில் உள்ளனர். இதுதவிர அவசர கால சூழ்நிலையில் பொதுமக்களை மீட்டு பாதுகாப்பாக தங்க வைப்பதற்காக 23 பல்நோக்கு பாதுகாப்பு மைய கட்டிடங்கள் அனைத்தும் தயார் நிலையில் உள்ளன. இம்மையங்களில் பொதுமக்களுக்குத் தேவையான உணவு வசதி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு உறுதி செய்யப்பட்டுள்ளன.

அதே வேளையில் பருவமழை காலத்தில் டெங்கு உள்ளிட்ட வைரஸ் காய்ச்சல் பரவாமல் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. மாவட்டத்தில் உள்ள 4 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள், 11 ஊராட்சி ஒன்றியங்கள் வாரியாக மொத்தம் 715 கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் (Breading Source Reduction workers) பணியில் ஈடுபடுத்தப்பட்டு அந்தந்த உள்ளாட்சிப் பகுதிகளில் ஒவ்வொரு வீடாக நேரடியாகச் சென்று கொசுப்புழு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் காய்ச்சல் சிகிச்சைக்காக வருகை தருவோர் குறித்த விவரங்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு குறிப்பிட்ட ஏதேனும் கிராமத்தில் அதிக அளவில் காய்ச்சல் பாதிப்பு வரும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட கிராமத்தில் முழுமையான தூய்மைப்பணிகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேபோல மொத்தம் 33 மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டு டெங்கு உள்ளிட்ட வைரஸ் காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் அனைத்து துறை சார்ந்த அலுவலர்களுக்கும் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணிகளை எவ்வித தொய்வுமின்றி விழிப்புடன் பணியாற்றிட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது என தொவித்தார்.

முன்னதாக மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரமக்குடி நகரில் சுகாதாரத்துறையின் சார்பாக அமைக்கப்பட்டிருந்த டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு கண்காட்சி அரங்கை பார்வையிட்டார்கள். தொடர்ந்து பரமக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மீட்புப் பணிகளுக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள இயந்திரங்களை பார்வையிட்டார்கள்.

அதனைத் தொடர்ந்து, பரமக்குடி அரசு மருத்துவமனை மற்றும் பார்த்திபனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றிற்கு நேரடியாகச் சென்று காய்ச்சல் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள நபர்களின் விவரம் குறித்து கள ஆய்வு செய்தார்கள்.

இந்நிகழ்வுகளின் போது கூடுதல் ஆட்சியர்/திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.மா.பிரதீப்குமார்,இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, இராமநாதபுரம் சார் ஆட்சியர் திரு.என்.ஓ.சுகபுத்திரன்,இ.ஆ.ப., பரமக்குடி வருவாய் கோட்டாட்சியர் திரு.ரவிச்சந்திரன், இணை இயக்குநர் வேளாண்மை துறை திரு.லூா.சொர்ணமாணிக்கம், மருத்துவ நலப்பணிகள் மரு.வெங்கடேசன், செயற்பொறியாளர்கள் பொதுப்பணித்துறை திரு.வெங்கடகிருஷ்ணன், ஊரக வளர்ச்சித்துறை திருமதி.சிவகாமி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.சேக் அப்துல்லா, சுகாதாரத்துறை துணை இயக்குநர் திரு.குமரகுருபரன், ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.வீ.கேசவதாசன் உட்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**